# ஆளும் கிரகம்

ஆளும் கிரகத்தை அறிந்தவனுக்கு ஞாலமும் சிறுகடுகாம்

ராசி 2 நட்சத்திரம் 5 | தமிழ் முதல் ஜோதிட மின்னிதழ் | புரட்டாசி - விசுவாவசு







வைபவ் சூரியவன்சி
ஜாதக ஆய்வு

சாம்பு மாமாவின்
புதிய ஆராய்ச்சி





# ஆளும் கிரகம்

**ஆளும் கிரகத்தை அறிந்தவனுக்கு ஞாலமும் சிறுகடுகாம்**

## ஜோதிட மின்னிதழ்

**சாஸ்திரம் சார்ந்த தமிழ் முதல் ஜோதிட மின்னிதழ்.**

**ப்ரணவ பீடம் ஆன்மீக அறக்கட்டளை வெளியீடு**

ப்ரணவ பீடம்
ஆன்மீக அறக்கட்டளை
கோவை

**தொலைபேசி**
9944133355
9944233355

**மின்னஞ்சல்**
editoragm@gmail.com

**இணைய தளம்**
www.pranavapeetam.org

**கௌரவ ஆசிரியர்கள்**

மஹாலிங்கம்
வெள்ளியங்கிரி

**துணை ஆசிரியர்கள்**

ஸ்ரீனிவாசன்
தாரா நாத்
தாமரைச் செல்வன்

### இறையருள் பெற்ற அனைவருக்கும் எனது வணக்கங்கள்

குருவின் கிருபையால் ஆளும்கிரகம் மீண்டும் உங்களின் பார்வையில் தவழ்கிறது. 2004-ஆம் ஆண்டு முதல் பல்வேறு வடிவங்களில் வெளிவந்துகொண்டிருக்கிறது ஆளும்கிரகம் இதழ். 2021-ஆம் ஆண்டு முதல் மின்னிதழாக வரத் தொடங்கியது. பல்வேறு தொழில்நுட்பக் காரணங்களால் தடைபட்டாலும், தற்சமயம் செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் புத்தாக்கம் பெற்று வெளிவருகிறது ஆளும்கிரக மின்னிதழ்.

கடந்த சில மாதங்களில் பல்வேறு வாசகர்கள் தொடர்புகொண்டு, "ஆளும்கிரகத்திற்கு என்ன ஆச்சு?" எனக் கேட்டார்கள். "அது வழக்கம்போல இயங்குகிறது" என வேடிக்கையாகப் பதில் கூறினோம். வாசகர்களின் ஆதரவும் ஆதங்கமும் எங்களை மிகவும் வியப்பில் ஆழ்த்தின. உங்களால் மீண்டும் உயிர்பெற்று வந்திருக்கிறது ஆளும்கிரகம்.

இனிவரும் காலத்தில் ஆளும்கிரகம் தொடர்ந்து வெளிவரும்; மேலும் பல வடிவங்களில் புதிய வடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜோதிடத்தின் உண்மையான விழிப்புணர்வு முகமாக ஆளும்கிரகம் இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டோம். சாஸ்திரத்தை உண்மையாக மக்களிடையே கொண்டு சேர்ப்பவர்களுக்கு என்றும் வீழ்ச்சியில்லை என உணர்த்திய அனைவருக்கும் நன்றி.

தியானிக்கும்
ஸ்வாமி ஓம்கார்



# யோகினி ஜோதிடம்

பாரத தேசத்தின் பெருமையே அதன் பன்மைத்துவம்தான். ஐம்பது கிலோமீட்டருக்கு ஒரு முறை மொழி, கலாசாரம், பண்பாடு என அனைத்தும் புத்துயிர் பெறுவது போல், ஜோதிட அறிவும் இடத்திற்கு இடம் தனித்தன்மையோடு வளர்ந்து செழித்த பூமி இது.

ரிஷிகளும் பெருமைமிக்க ஞானிகளும் இறையருளால் நமக்கு வழங்கிய ஜோதிட மெய்ஞானம், கால மாற்றத்திற்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக்கொண்டே பயணிக்கிறது. நாடி ஜோதிடம், வேத ஜோதிடம், பத்ததி ஜோதிடம் எனப் பல பிரிவுகள் இன்று நடைமுறையில் இருந்தாலும், அனைத்தையும் கடந்து அசாத்திய துல்லியத்தை வழங்கவல்ல ஓர் அபூர்வப் பொக்கிஷம்தான் யோகினி ஜோதிடம்.

**யார் இந்த யோகினிகள்?**

முதலில் ஒன்றை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்: யோகினிகள் என்பவர்கள் நாம் கதைகளில் கேட்கும் மோகினிகளோ, தீய சக்திகளோ அல்ல. அவர்கள் அன்னை மகா சக்தியின் ஆற்றல் வடிவங்கள்; தேவியின் திருக்கரங்களாகச் செயல்படும் புனிதப் பேராற்றல்கள். ஒடிசா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் நேபாளம் போன்ற புனிதப் பிரதேசங்களில் காணப்படும் 64 யோகினிக் கோயில்கள், இந்த உன்னத வழிபாட்டு மரபுக்குச் சான்றாக விளங்குகின்றன.

தந்திர கலாசாரத்தின் உட்பிரிவான 'கௌலத் தந்திரம்' இந்த வழிபாட்டு முறையை விரிவாகப் பேசுகிறது. அன்னை மஹா வித்யாவின் எட்டு வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொன்றிலிருந்தும் எட்டு யோகினிகளாக விரிந்து 64 யோகினிகளாக விளங்குகின்றனர்.

நமது சாத்திரங்களில் 36, 64, 91, 108 எனப் பல வரிசைகளில் யோகினிகள் போற்றப்படுகிறார்கள். அன்னையை முழுமையாக உபாசிப்பதைவிட, அவளது அங்கமாய்த் திகழும் யோகினிகளை வழிபடுவது எளிமையானது; விரைவான பலன்களைத் தரக்கூடியது.

**நவக்கிரக ஜோதிடமும் யோகினி ஜோதிடமும்: என்ன வேறுபாடு?**

பொதுவான ஜோதிட முறையில் நவக்கிரகங்கள் தாங்கள் அமர்ந்திருக்கும்

நட்சத்திரங்களின் அடிப்படையில் பலன்களை வழங்குகின்றன. ஆனால் யோகினி ஜோதிடத்தில், ராசி மண்டலமே யோகினிகளின் ஆளுகைக்கு உட்பட்டுப் பிரிக்கப்படுகிறது.

ஒரு கிரகம் எந்த யோகினியின் கட்டுப்பாட்டுக்குள் அமைகிறதோ, அதற்கேற்ப அதன் தாக்கம் வியக்கத்தக்க நுட்பத்துடன் வெளிப்படும். தற்போது பலரும் யோகினி தசா, அஷ்ட யோகினி (மங்களா, பிங்களா போன்றவை) போன்றவற்றை மேலோட்டமாகப் பயன்படுத்திப் பலன் சொல்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், அவை கடலின் ஒரு துளி மட்டுமே.

யோகினி ஜோதிடம் என்பது முழுமையான, ஆழமான ஒரு தனிக்கலை.

**துல்லியத்தின் உச்சம்!**

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்றார் பாரதி. அதுபோல, பல ஜோதிட முறைகளை ஆய்வு செய்த அனுபவத்தில் உறுதியாகச் சொல்வேன்—யோகினி ஜோதிடத்தை விட மிகத் துல்லியமான முறை





வேறொன்றும் இல்லை.

விம்சோத்தரி தசா முறையை மட்டும் வைத்துக்கொண்டு, அதற்கான ஜோதிட முறையான வேதகால ஜோதிடமோ, உயர் நட்சத்திர ஜோதிடமோ இல்லாமல் இருந்தால் எப்படிப் பலன் சொல்ல முடியும்? அதுபோலத்தான் யோகினி தசா என்பது மட்டுமே இருந்தது; அதை வைத்துப் பலர் பலன் சொல்ல முயன்றார்கள். விளைவு தோல்வியே..!


தாந்திரீக மரபில் மட்டுமே புழங்கி, காலவோட்டத்தில் மறைந்துபோன இந்த ஞானம், பல்வேறு யோகினி பீடங்களில் நான் மேற்கொண்ட தீவிர தியானத்தின் வழியாக எனக்குள் வெளிப்பட்டது.

யோகினி ஜோதிடத்தில் பிறப்பு ஜாதகம், பிரசன்ன ஜாதகம், உடனடிப் பலன் எனப் பல விஷயங்களையும், நம் அறிவுக்கு எட்டாத வகையில் நுட்பமான பலன்களையும் பார்க்க முடியும்.

ஆன்மிகமும் அறிவியலும் இணையும் இந்த யோகினி ஜோதிடப் பெருங்கடலில் மூழ்கி, இனிவரும் பகுதிகளில் அதன் அரிய ரகசியங்களை ஒவ்வொன்றாக அறிவோம் வாருங்கள்!



# வைபவ் சூரியவன்சி




சுக் தசா இருப்பு 12 வருடம் 6 மாதம் 27 நாள்

கிரிக்கெட் வானில் மின்னப்போகும் வைபவ் சூர்யவன்ஷி!

கிரிக்கெட் உலகில் 15 வயதிலேயே தன் அபார ஆட்டத்தால் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்திருப்பவர் வைபவ் சூர்யவன்ஷி.

எதிர்காலத்தில் உலகையே திரும்பிப் பார்க்க வைக்கப் போகும் இவரின் ஜாதகம் என்ன சொல்கிறது? கிரக நிலைகள் சுட்டிக்காட்டும் ஆச்சரியங்கள் இதோ!

**லக்ன அமைப்பு**

வைபவ் அவர்களின் லக்னம் மீனத்தில் அமர்ந்துள்ளது. லக்னத்தின் உப நட்சத்திராதிபதியான சுக்கிரன், மூன்று மற்றும் எட்டாம் வீட்டிற்கு அதிபதியாகி 11-ல் அமர்ந்துள்ளார். இந்த சுக்கிரன் கும்ப ராசியில் அமர்ந்திருப்பது இது ஒரு ஆண் ஜாதகம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

லக்ன டிகிரிக்கு மிக அருகில் அறிவுக்காரகனான புதன் அமர்ந்திருப்பது இவரின் மிகப்பெரிய பலம். லக்ன உப

நட்சத்திராதிபதியை விட புதனின் ஆதிக்கமே இங்கு மேலோங்கி நிற்கிறது. இதனால் அபாரமான புத்திக்கூர்மை, நுட்பமான சிந்தனை மற்றும் தொழில்நுட்ப யுக்திகளைக் கையாளுவதில் இவர் கைதேர்ந்தவராக விளங்குவார். லக்னாதிபதி குருவும், சுக்கிரன் நின்ற நட்சத்திர அதிபதியான செவ்வாயும் 12-ல் மறைந்திருப்பது சில விரயங்களைக் காட்டினாலும், லக்ன புதனின் பலத்தால் அனைத்துச் சவால்களையும் வென்று கம்பீரமான ஆளுமையோடு மிளிர்வார்.

**கல்வி மற்றும் ஆளுமை**

நான்காம் வீட்டின் உப நட்சத்திராதிபதி சுக்கிரன், 12-ல் உள்ள செவ்வாயின் நட்சத்திரத்தில் அமர்ந்திருப்பதால் அடிப்படை மற்றும் விளையாட்டு சார்ந்த கல்வியில் நல்ல தேர்ச்சி உண்டு. அதேநேரம், ஒன்பதாம் வீட்டின் உப நட்சத்திராதிபதியான சூரியன் மற்றும் சனியின் தொடர்புகளால் உயர்கல்வியில் சில தடைகளும் சவால்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கிரிக்கெட் களத்தில் சாதனை சிகரம்!**

பத்தாம் வீட்டின் உப நட்சத்திராதிபதியான சூரியன், ஆறாம் வீட்டின் அதிபதியாகி 12-ல் குருவுடன் இணைந்திருப்பது இவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லும் அற்புதமான யோகமாகும்.

புதிய பாதையை வகுத்து, கிரிக்கெட் சாதனைகளைத் தகர்த்தெறியும் வல்லமை இவருக்கு உண்டு.

மூன்று மற்றும் ஐந்தாம் அதிபதிகளான சுக்கிரன் மற்றும் சந்திரனின் தொடர்புகள் பத்தாம் வீட்டில் வலுவாக அமைந்திருப்பதால், விளையாட்டுத் துறையிலேயே இவருக்கு அசுர வளர்ச்சி அமையும்.

19ஆம் வயதில் துவங்கும் சந்திர தசா சர்வதேச அளவில் இவரை மிகப்பெரிய உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

29 வயதில் ஆரம்பமாகும் செவ்வாய் தாசாவின் 7 வருடங்கள், பல்வேறு ஜாம்பவான்களின் சாதனைகளை முறியடித்து இவரை உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் நட்சத்திரமாக ஜொலிக்க வைக்கும்! இவரின் பத்தாம் பாவகத்தில் உள்ள அதிர்ஷ்டப் புள்ளியும் இதற்கு முழு பலம் சேர்க்கிறது.

**இல்லற வாழ்க்கை: காதலும்**

ஏழாம் வீட்டின் உப நட்சத்திராதிபதி சுக்கிரன் 11-ல் அமைந்திருப்பதால், நண்பர்கள் வட்டாரத்திலிருந்தே இவருக்கு வாழ்க்கைத் துணை அமையும் வாய்ப்புகள் அதிகம். மேலும், அந்த இடம் ஏழாம் வீட்டிற்கு ஐந்தாம் இடமாக வருவதால், இவருடைய வாழ்க்கைத் துணைவி கலைத்துறையைச் சார்ந்தவராக இருக்கவும், இது காதல் திருமணமாக அமையவும் பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன. சந்திர திசையில், புதன் புக்தி மற்றும் சுக்கிர அந்தரக் காலகட்டத்தில் இவருக்குத் திருமண யோகம் கைகூடிவரும்.

காதல் திருமணம், இரண்டு குழந்தைகளின் பாசமிகு தந்தை எனத் தனிப்பட்ட வாழ்க்கையிலும், கிரிக்கெட் உலகின் புதிய நாயகனாக உலக மேடையிலும் வைபவ் சூர்யவன்ஷி வரலாறு படைக்கப் போவது உறுதி!







## வேலை வாய்ப்புத் தன்மைகளை கிரகம் குறிக்கும் அமைப்பு

சூரியன் - அரசு வேலை
சந்திரன் - தற்காலிக வேலை
செவ்வாய் - கடினமான வேலை
புதன் - தரகு / கமிஷன் வேலை
குரு - பயிற்சியாளர் வேலை
சுக்கிரன் - மார்கெட்டிங் வேலை
சனி - பணியாளர் வேலை
ராகு - வெளிநாட்டு வேலை
கேது - சுயவேலை வாய்ப்பு




## பாவகம் தொடர்புகொள்ளும் வேலை வாய்ப்பு தன்மைகள்

பாவகம் 1 - சுயவேலை வாய்ப்பு
பாவகம் 2 - பொருளாதார வேலை
பாவகம் 3 - தொலைதொடர்பு வேலை
பாவகம் 4 - நிரந்தர வேலை
பாவகம் 5 - வேலை இழப்பு
பாவகம் 6 - பணியாளர் வேலை
பாவகம் 7 - மார்கெட்டிங் வேலை
பாவகம் 8 - கடினமான வேலை
பாவகம் 9 - பயணங்கள் சார்ந்த வேலை
பாவகம் 10 - உயர்ந்த வேலைவாய்ப்பு
பாவகம் 11 - நிறைவான வேலைவாய்ப்பு
பாவகம் 12 - வெளிநாட்டு வேலைவாய்ப்பு




## RP டிப்ஸ்

திருமண நாள், பிறந்த நாள் என வருடாந்திர கொண்டாட்டங்கள் பற்றிப் பேசும்பொழுது தற்சமயம் ஓடும் லக்னம் குரு என்ற கிரகத்தையும் 10ஆம் வீட்டையும் தொடர்புகொள்ளும்.



# சாம்பு மாமாவின் சந்தேகங்கள்



**சாம்பு மாமா** என எல்லோராலும் அழைக்கப்படும் சாமிநாத அய்யர் ஒரு ஜோதிட "வித்து"வான். ஜோதிடம் தெரியும் என்ற நினைப்பில் பரிகாரம் போன்ற வழிகளில் மக்களை ஏமாற்றும் வகையில் ஜோதிடத்தைத் தொழிலாகக் கொண்டவர். இவருக்கு ஜோதிட அறிவு இல்லை என்றாலும் பல ஜோதிட அமைப்புகள் ஜோதிட சாம்ராட், ஜோதிட வாச்சஸ்பதி என பல பட்டங்கள் கொடுத்திருக்கிறது என்பது வேடிக்கை. அவர் கேட்கும் பல கேள்விகள் முட்டாள்தனமாக இருந்தாலும் பல உண்மைகளை உங்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டும்.

**வெங்கி** என்று அழைக்கப்படும் வெங்கட்ரமணன் இளவயதில் ஜோதிடத்தை ஆழமாகக் கற்றுத் தெளிந்த நிலையில் இருக்கிறான். சாம்பு செய்யும் வேலைகள் அவனுக்குப் பிடிக்காவிட்டாலும், சாம்புவுக்கும் அவன் குடும்பத்திற்கும் நெருக்கமானவன். சாம்புவின் கேள்விகளுக்கு விவேகமான பதில் சொல்வதில் வெங்கியை யாரும் மிஞ்ச முடியாது.

**அம்புஜம் மாமி** சாம்புவின் தர்மபத்தினி. கணவர் ஜோதிடத்தில் செய்யும் சுயநலமான விஷயங்களைக் குடும்பம் நடத்துவதற்காக கண்டும் காணாமல் இருப்பவர். ஏதாவது அதிசயம் நிகழ்ந்து தன் கணவர் திருந்தி நல்ல ஜோதிடராக மாறுவார் என ஏங்கும் நம் திருநாட்டின் பெண்மணிகளில் ஒருவர்.

---

(ரொம்ப நாளா பார்க்காத காரணத்தால, வெங்கி சாம்பு மாமாவின் வீட்டுக்குள்ள நுழைகிறான். அங்கே அம்புஜம் மாமி ஹாலல உட்கார்ந்து, டிவி பார்த்துண்டே காய் நறுக்கிக்கொண்டு இருக்கிறார்)

வெங்கி: என்ன மாமி, ரொம்ப நாளா உங்களை பார்க்கவே இல்லையே? மாமாவும் ரொம்ப பிஸியோ? எங்க... மாமாவைக் காணோம்?

அம்புஜம் மாமி: வாடா அம்பி! உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு. எப்படிப் போறது உன்னுடைய ஜோதிடக் கல்வி எல்லாம்?

வெங்கி: ரொம்ப நன்னாப் போறது மாமி. என்னுடைய ஜோதிட குருநாதர், இந்த வருஷத்தோட இருபத்தஞ்சு வருடங்கள் நிறைவு செய்யறார்... எங்களுடைய ஜோதிடப் பயிற்சி மையம் ஆரம்பிச்சு 25 வருஷம் ஆகுது. அதைக் கொண்டாடுறதுக்குதான் நாங்க எல்லாம் தயாராயிட்டு இருக்கோம். அந்த விழாவுக்கு அழைக்கத்தான் நான் சாம்பு மாமாவைக் கூப்பிட வந்தேன்.

அம்புஜம் மாமி: சாம்பு மாமாவை நீ கூப்பிட வந்ததெல்லாம் இருக்கட்டும்... அவர் ரொம்ப நாளா வெளியே வராம காணாமப் போனதுக்கு என்ன காரணம்னு தெரியுமா? அவர் ஒரு தீவிரமான ஆராய்ச்சியில ஈடுபட்டுண்டு இருக்கார்! அவருடைய ரூம்லயேதான் இருக்கார், போய் பாரு.

(வெங்கி மெல்ல மாமாவின் அறைக்குள் நுழைகிறான். அங்கே முகம் முழுவதும் வெள்ளை நிறக் கிரீமைப் பூசிக்கொண்டு, கண்கள்ல வெள்ளரிக்காய் வச்சபடி மாமா ஈஸி சேர்ல மல்லாந்து படுத்துண்டிருக்கார்.)

வெங்கி: (பதற்றத்துடன்) மாமா! என்னாச்சு... உங்க முகமெல்லாம் இப்படி...?

வெங்கி: மாமா! என்னது இது... மூஞ்சியெல்லாம் கிரீமைப் பூசிட்டு உட்கார்ந்திருக்கீங்க? உங்க அழகை இன்னும் அழகாக்கப் போறீங்களா?

சாம்பு: வாடா அம்பி! என் அழகை நான் எதுக்குடா திருப்பி அழகாக்கணும்? நான் ஒரு புதிய ஆராய்ச்சியில ஈடுபட்டிருக்கேன்டா. வெங்கி: என்ன ஆராய்ச்சி மாமா? அதாவது... புதுசா ஒரு முகக் கிரீமை நானே தயாரிச்சு விக்கலாம்னு இருக்கேன். அதுக்கான சோதனைதான் இது.

வெங்கி: என்ன மாமா ஆச்சு உங்களுக்கு? இந்த ஊர்லயே நீங்கதான் பெரிய ஜோசியர். இப்போ உங்களுக்கு வியாபார ஆசை வேற வந்துடுச்சா?

சாம்பு: அது இல்லடா வெங்கி! ஜோதிடத்திலேயே இந்த முகக் கிரீமை விக்கலாம்னு யோசிச்சு வச்சிருக்கேன். வெங்கி: ஜோதிடத்துல முகக் கிரீமா? என்ன மாமா சம்பந்தமே இல்லாம பேசுறீங்க! வழக்கமா நீங்க இப்படியெல்லாம் யோசிக்க மாட்டீங்களே... எப்பவும் உங்க யோசனையே ரொம்ப வித்தியாசமா இருக்குமே!

சாம்பு: ம்... சொல்லு.

வெங்கி: இல்ல... ராசிக்கல் போடுறது, எந்திரம்-தாயத்து விக்கிறது, பயமுறுத்துற மாதிரி பரிகாரம் சொல்றதுன்னு போவீங்கன்னு பார்த்தா... திடீர்னு என்ன முகப்பொலிவு, பியூட்டி பார்லர் ரேஞ்சுக்கு வந்துட்டீங்க?

சாம்பு: அங்கதான்டா இந்த சாம்பு நிக்கிறான்!

வெங்கி: புரியலையே மாமா...

சாம்பு: முகத்துல பூசி முகத்தை அழகாக்குற கிரீமைத் தயாரிச்சு, அதை 12 ராசிக்காரங்களுக்கும் ஏத்த மாதிரி 12 விதமான கிரீமா நான் விக்கப் போறேன்டா!

வெங்கி: 12 ராசிக்கும் தனித்தனி கிரீமா?!

சாம்பு: ஆமாண்டா! அவங்க ஜாதகத்தைக் கணிச்சு, அவங்க ராசிக்கு ஏத்த கிரீமைக் கொடுத்தா, கிரகம் சரியாகி முகம் இன்னும் ஜொலிக்கும்! "மேஷ ராசி கிரீம்", "ரிஷப ராசி கிரீம்"-னு தனித்தனியா பிராண்ட் பண்ணப் போறேன். எப்படி என் ஐடியா?

வெங்கி: அதான பார்த்தேன்! சாம்பு மாமாவோட குடுமி சும்மா ஆடுமா? இவ்வளவு நாளா கல்யாணம், காட்சி, வியாபாரம்னு சொல்லி வந்தவங்களை எல்லாம் விட்டுட்டு, இப்போ டீனேஜ் பசங்களையும் டார்கெட் பண்ண ஆரம்பிச்சிட்டீங்களா?

சாம்பு மாமா: ஆமாண்டா! அவங்கதான் ஏஐ (AI) காரங்ககிட்ட போயிட்டு, "என் முகம் வெள்ளையாகுறதுக்கு, பருவெல்லாம் போறதுக்கு என்ன பண்ணணும்?"னு கேட்குறாங்க. அதனால இந்த ஜோதிடத்தையும் ஏஐ-யையும் ஒண்ணாக்கி, இவங்களுக்கு முகக் கிரீம் விக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன். ஜாதகத்தைக் கொடுத்தா போதும்... அவங்க ராசியைப் பார்த்து கிரீமை அனுப்பி வச்சிடுவேன். ஆல் இந்தியா ஃப்ரீ கொரியர்டா!

வெங்கி: அது இருக்கட்டும் மாமா... குழந்தைகளை ஏன் விட்டு வச்சிருக்கீங்க? அவங்களுக்கும் பன்னிரண்டு ராசிக்கு பன்னிரண்டு விதமான பால் பவுடர், கூழ்-னு தயாரிச்சீங்கன்னா பிறந்த குழந்தையில இருந்து



வயசானவங்க வரைக்கும் எல்லாரையும் கவர் பண்ணிடலாமே!

(அம்புஜ மாமி உள்ளே வருகிறார்)

அம்புஜ மாமி: நல்லா கேளுடா! இவரோட ஆராய்ச்சி முத்திப்போயி, நம்ம வீட்டுக்குச் சாப்பிட வர காக்காய்க்குக்கூட கிரீமைப் பூசி அழகுபடுத்தப் போறேன்னு உக்காந்திருக்காரு!

வெங்கி: அது கிடக்கட்டும் மாமி... உங்களுக்கு அவரு கிரீம் எதுவும் போடலையா?

சாம்பு மாமா: அது இல்லடா... அவளோட ராசியில ராகு உக்காந்திருக்கான். எத்தனை வாட்டி கிரீம் பூசினாலும் அவ இப்படித்தான் இருப்பா!

அம்புஜ மாமி: ஏண்டா... இவரு சொல்றது உண்மையா?

வெங்கி: நீங்க வேற மாமி! ஒருத்தரோட ஜாதகத்துல லக்னத்தின் உபநட்சத்திரம் சுக்கிரனா இருந்து, அந்த சுக்கிரன் லக்னத்தையும், 5-ம் பாவத்தையும், 11-ம் பாவத்தையும் தொடர்பு கொண்டா அவங்க பிறப்பிலேயே அழகா இருப்பாங்க. அதே சுக்கிரன் பார்வையும், சந்திரன் தொடர்பும் லக்னத்துக்கு இருக்கும்போது, இந்த மாதிரி எதாவது கிரீம் போட்டா முகம் தற்காலிகமா அழகா இருக்கும்.

ஏன்னா சந்திரனே தேஞ்சு மறையக்கூடிய தற்காலிகமான கிரகம் தானே? மத்தபடி சனி, ராகு மாதிரியான கிரகங்களோட தொடர்பு லக்னத்துக்கும், 5, 11-ம் பாவங்களுக்கும் இருக்கும்போது எவ்வளவு பெரிய கிரீமைப் பூசினாலும் பெருசா மாற்றம் எதுவும் நடக்காது. தசாபுத்தியிலயும் 1, 5, 11 தொடர்புகள் நடக்கும்போதுதான் மேனி அழகுக்கும் வெளிப்புற அழகுக்கும் முக்கியத்துவம் தருவோம்னு எங்க குருஜி சொல்லியிருக்காரு. இதுல 1, 5, 11 இயற்கை அழகைக் குறிக்கும்; 1, 6, 11 சம்பந்தப்படும்போதுதான் இந்த மாதிரி செயற்கையா கிரீம் போட்டு வர்ற அழகைக் குறிக்கும்!

அம்புஜ மாமி: அது எப்படியோ போவட்டும்டா... இவர்கிட்ட இருந்து என்னை எப்படியாச்சும் காப்பாத்து! இவரு கிரீம் விக்கிற வேகத்தைப் பார்த்தா என்னென்ன பண்ணுவாரோன்னு எனக்கே பயமா இருக்கு!

வெங்கி: கவலைப்படாதீங்க மாமி... அவருக்கு 2, 6, 11 தொடர்பு இருக்கு; வருமானம் பாக்குற வழி அவருக்குத் தெரியும், அதான் வியாபாரம் பண்றாரு. நாமதான் அவர்கிட்ட கொஞ்சம் சூதானமா இருக்கணும்!



# கேள்வியால் வேள்வி

## ஸ்வாமி ஓம்காருடன் சத்சங்கம்

**தசா நாதன் மற்றும் புத்தி நாதன் இருவரும் 6/8 வீடுகளில் ஜாதகத்தில் இருந்தால் அந்த தசா புக்தி காலத்தில் பிரச்சனைகள் வருமா?**


ஜோதிட சாஸ்திரத்தில் தசா புக்தியை அடிப்படையாகக் கொண்டு பலன் உரைப்பது என்பது மிகவும் தனித்துவமான ஒரு வழிமுறை. பெரும்பாலான ஜோதிட முறைகளில் தசா புக்தியின் பங்களிப்பு தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதப்பட்டாலும், அதன் உண்மையான அடிப்படை தத்துவம் என்னவெனில், அது 'கால நிர்ணயத்திற்காக மட்டுமே' பயன்படக்கூடிய ஒரு கருவி.

ஆனால், தற்காலத்தில் பலரும் தசா புக்தியை மட்டுமே நேரடியாகப் பலனாக உருவகப்படுத்திப் பேசுவது ஜோதிட சாஸ்திர விதிகளுக்கு முற்றிலும் முரணானது என்பதை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ராகு தசா நடந்தால் கெடுதல்; சுக்கிர தசா நடந்தால் கொட்டிக் கொடுக்கும் நன்மைகள்" என்று மேலோட்டமாக, எந்தவித தீவிர ஆய்வுமின்றிப் பலன் கூறுவது ஜோதிட நியதியாகாது.

ஒரு ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளை முழுமையாக ஆராய்ந்து, குறிப்பிட்ட ஒரு கிரகம் எப்போது தனது பலனை வெளிப்படுத்தும் என்பதைக் கண்டறியும் காலக் கருவியாகத்தான் தசா புக்தியை நாம் அணுக வேண்டும். மாறாக, "தசா நாதனும் புக்தி நாதனும் இப்படி இருக்கிறார்கள்; சுக்கிர தசாவில் குரு புக்தி வந்தால் இரண்டும் ஒன்றுக்கொன்று பகை கிரகங்கள், எனவே நற்பலன்கள் இருக்காது" என்றெல்லாம் போகிற போக்கில் முடிவெடுப்பது முறையல்ல.

தசா முறையை முறையாகக் கற்றுணர்ந்து, அதன் சூட்சுமத்தை ஆய்ந்த பிறகே பலன் கூற முன்வர வேண்டும்.







**ஷேர்மார்கெட்டில் முதலீடு செய்யது லாபம் பார்க்க லக்னம் 1,3, 11 பாவகங்களை குறிக்கும் பொழுது முதலீடு செய்யலாம் என ஒருவர் இணையத்தில் சொன்னதை வைத்து முதலீடு செய்தேன். ஆனால் லாபம் வரவில்லை. இந்த முறை சரியானதா?**

பங்குச்சந்தை முதலீட்டிற்கு பொதுவான 1, 3, 11 பாவங்கள் மட்டுமே போதுமானவை அல்ல.

லக்னம் 1, 3, 11-ஐக் காட்டும்போது லட்சக்கணக்கானோர் முதலீடு செய்வதால், அனைவருக்கும் ஒரே நேரத்தில் லாபம் கிடைத்துவிடாது.

உங்கள் தனிப்பட்ட ஜாதகத்தில் 2, 6, 10, 11 ஆகிய பாவங்களின் தசா-புக்தி அல்லது கிரகக் குறிகாட்டிகள் சாதகமாக இருக்க வேண்டும்.

அன்றைய தினத்தில் சந்திரன் அந்த நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும் போது மட்டுமே முதலீட்டில் உண்மையான லாபம் கிட்டும். ப்ரசன்ன ஜாதகம் அமைத்து, அதில் 2, 6, 10, 11 காட்டும் சரியான காலகட்டங்களில் முதலீடு செய்யலாம்.

பங்குச்சந்தையைத் துல்லியமாக ஆய்வு செய்து முதலீடு செய்வதற்கு 'ஸ்ரீ திருஷ்டி' என்ற பிரத்யேக முறை பயிற்றுவிக்கப்படுகிறது. இம்முறையின் மூலம் சந்தையின் போக்கை முன்கூட்டியே மிகச் சரியாக நிர்ணயிக்க முடியும்.

ப்ரசன்னம் வழியே முதலீட்டை நிர்வகித்து, அன்றைய தினம் லாபமா அல்லது நஷ்டமா என்பதைத் தெளிவாக அறியலாம். வெறும் லக்னத்தையும் 1, 3, 11-ஐயும் மட்டுமே நம்பி முதலீடு செய்வது மிகவும் அபாயகரமானது.

ப்ரணவ பீடம் ஆன்மிக அறக்கட்டளை தனது 25 ஆண்டுகாலப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து கம்பீரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வெள்ளிவிழாத் தருணத்தில், அதன் பெருமைமிகு வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போம்






## ப்ரணவ பீடம் ஆன்மீக அறக்கட்டளையின் தோற்றம் மற்றும் ஜோதிடப் பாதையின் பயணம்.

1996 - 2026

தந்தையின் வழிகாட்டலில் சிறுவயதிலேயே ஜோதிட ஞானத்தைப் பெற்ற சுவாமி ஓம்கார், தனது 11-ஆம் வயதிலேயே பொதுமக்களுக்கு ஜோதிட வழிகாட்டலைத் தொடங்கினார். வேத கால ஜோதிடம் மற்றும் கேரள ஜோதிட முறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், தனது 17-ஆம் வயதில் நவீன ஜோதிட முறைகளை ஆழமாகக் கற்கத் தொடங்கினார்.

குறிப்பாக, உயர் நட்சத்திர ஜோதிட வல்லுநர்களின் வழிகாட்டலில் KP ஜோதிட முறையைக் கற்றுத் தெளிந்தார். அதே காலகட்டத்தில், கே.பி. ஜோதிட முறையை உலகிற்குத் தந்த உயர்திரு கே.எஸ். கிருஷ்ணமூர்த்தியின் புதல்வர் ஹரிஹரன் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டு ஜோதிட நுணுக்கங்களை மேலும் செழுமைப்படுத்திக் கொண்டார்.தனது தீவிர ஆய்வின் பயனாக, 18-ஆம் வயதிலேயே உயர் நட்சத்திர ஜோதிட ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். தொடர்ந்து பல ஜோதிட மாநாடுகளில் பங்கேற்று, ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து, 20 வயது நிறைவடைவதற்குள்ளாகவே பல்வேறு ஜோதிடப் பட்டங்களையும் பாராட்டுகளையும் பெற்று முத்திரை பதித்தார்.



ஸ்வாமி ஓம்கார் தனது 19-ஆம் வயதில் 'மகரிஷி நட்சத்திர ஜோதிட ஆராய்ச்சி நிலையம்' என்ற ஜோதிட வழிகாட்டுதல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

பின்னர் இவ்வமைப்பு, 2004-ஆம் ஆண்டு வேதகாலக் கல்வி, அறிவியல் பூர்வமான ஜோதிடம் மற்றும் வேத நெறி சார்ந்த வாழ்வியல் நெறிமுறைகளை முன்னெடுக்கும் உன்னத நோக்கத்துடன் ப்ரணவ பீடம் ஆன்மிக அறக்கட்டளையாகப் பரிணமித்தது.









ஸ்வாமி ஓம்காரின் முன்னெடுப்பில், 2004-ஆம் ஆண்டு கோவையில் முதலாவது ஜோதிட மாநாடு மிகப்பிரம்மாண்டமாக நடைபெற்றது. இம்மாநாட்டிற்குத் திரு. கே. ஹரிஹரன் அவர்களும், ஜோதிட மேதை கே.எஸ். கிருஷ்ணமூர்த்தியின் நேரடி மாணவரான சிறுமுகை பொன்னுசாமி அவர்களும் தலைமை தாங்கினர்.








2005-ஆம் ஆண்டு, யோகக் கல்வி திருமதி Dr.ராணி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. 2005 ஆண்டில், ப்ரணவ பீடத்தின் முதலாவது பஞ்சாங்கமும் மாணவர்களால் சிறப்பாக வெளியிடப்பட்டது.





2005 முதல் பல்வேறு ஜோதிடப் பயிற்சிகளும் யோகப் பயிற்சிகளும் நடைபெறத் தொடங்கின.



தமிழகத்தின் பல்வேறு நகரங்கள் மட்டுமன்றி, டெல்லி, மும்பை போன்ற பெருநகரங்களிலும் இப்பயிற்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.












2010-ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு ஸ்வாமி ஓம்கார் பவுண்டேஷன் (Swami Omkar Foundation) என்ற பெயரில் ப்ரணவ பீடம் தனது சர்வதேசப் பயணத்தைத் தொடங்கியது. 2012 முதல் இதன் செயல்பாடுகள் ஜெர்மனி மற்றும் அர்ஜென்டினா நாடுகளுக்கும் விரிவடைந்தன.

ஸ்வாமி ஓம்காரும் அவரது மாணவர்களும் இணைந்து ஆண்டுதோறும் இலவச ஜோதிட ஆலோசனைகள் வழங்கும் நட்சத்திர விழா, ஆவணி மாத விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடைபெறும் ப்ரணவ உற்சவம் எனப் பல்வேறு ஆன்மிக, ஜோதிட விழிப்புணர்வு நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

ப்ரணவ பீடம் ஆன்மிக அறக்கட்டளையில் கற்பிக்கப்படும் சாஸ்திரங்களை அன்றாட வாழ்வியலில் உணர்ந்து வாழும் வகையில், 2017-ஆம் ஆண்டு நாத கேந்திரா என்னும் ஆன்மிகச் சூழலை ஸ்வாமி ஓம்கார் நிறுவினார்.

ஸ்வாமி ஓம்கார் அவர்கள் தனது ஜோதிடப் பயணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் துல்லியமான ஜோதிட ஆலோசனைகள் வழங்கியுள்ளார்; நூற்றுக்கணக்கான சிறந்த ஜோதிட மாணவர்களையும் உருவாக்கியுள்ளார்.






2000-ஆம் ஆண்டு முதல் 2026-ஆம் ஆண்டு வரை பல்வேறு சாஸ்திர வளர்ச்சிப் பணிகளை ஸ்வாமி ஓம்கார் அவர்கள் ப்ரணவ பீடம் ஆன்மிக அறக்கட்டளை மூலம் முன்னெடுத்துச் செயல்படுத்தினார்.2026 செப்டம்பர் 20 அன்று, ப்ரணவ உற்சவம் என்ற பிரம்மாண்ட ஜோதிட மாநாடு அமைப்பின் 25-ஆம் ஆண்டு வெள்ளிவிழாவாகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. 2004-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் ஜோதிட மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு. கே. ஹரிஹரன் அவர்கள், இவ்விழாவிற்கும் மீண்டும் தலைமையேற்றுச் சிறப்பித்தார்.


1997


2026



திரு. ஹரிஹரன் மற்றும் திருமதி. ஸ்ரீவித்யா ஹரிஹரன் ஆகியோர் இணைந்து கலந்துகொண்டு, ப்ரணவ பீடத்தின் 25-ஆம் ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வை மேலும் பெருமைப்படுத்தினர்.

இவ்விழாவில் 12 தலைப்புகளில் ஆய்வு மேற்கொண்ட 36 ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பட்டயங்களும், அடிப்படை ஜோதிடம் மற்றும் தொழில்முறை ஜோதிடம் பயின்ற மாணவர்களுக்குப் பயிற்சிச் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. கால் நூற்றாண்டு கடந்தும், ப்ரணவ பீடம் ஆன்மிக அறக்கட்டளையின் ஜோதிட விழிப்புணர்வுப் பணி தடையின்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

25 ஆண்டுகளுக்குப் பிறகு ப்ரணவ பீடம் ஆன்மிக அறக்கட்டளை தனது
விழிப்புணர்வுப் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது..!



# ஜோதிட பயிற்சி வகுப்புகள்

## குருகுல ஜோதிட பயிற்சி

குருவருள் நிறையும் அமைதியான ஆன்மீகச் சூழலில் தங்கி, 3 நாள் நேரடி குருகுலப் பயிற்சியில் ஜோதிட ஞானத்தைப் பெறுங்கள். பிறப்பு ஜாதகத்தை ஆழமாக ஆராய்ந்து துல்லியமாகப் பலன் கூறும் முறையை நேரடியாகக் கற்றுக்கொள்ளுங்கள்.

அக் 23,24,25

## ஆன்லைன் ஜோதிட பயிற்சி

ஞாயிறுதோறும் காலை 10:00 மணி முதல் 1:00 மணி வரை நடைபெறும் இணையவழி வகுப்புகள் மூலம் ஜோதிடத்தை எளிதாகக் கற்றுக்கொள்ளுங்கள். 12 வகுப்புகளில் முழுமையான பயிற்சியைப் பெற, உங்கள் வீட்டிலிருந்தபடியே இணையுங்கள்!

அக் 18 முதல்

பிரணவ பீடம்
ஆன்மீக அறக்கட்டளை
www.pranavapeetam.org

பயிற்சி பற்றிய தகவல்கள் மற்றும் முன்பதிவுக்கு
99442 33355 - 78714 10101 - 81223 27551

# யோகினி ஜோதிட பயிற்சி

நவம்பர் 13,14,15
மூன்று நாட்கள் நேரடி மற்றும் ஆன்லைன் பயிற்சி



யோகினி ஜோதிடம் பற்றிய அறிமுக உரையை QR code ஸ்கேன் செய்து கண்டுகளியுங்கள்.

உலகில் மறைபொருளாக உள்ள யோகினி ஜோதிட முறையை முழுமையாகக் கற்றுக்கொள்ளுங்கள்.
முதன்முறையாக நடைபெறும் நேரடி மற்றும் ஆன்லைன் வகுப்பில் கலந்துகொள்ளுங்கள்.
ஆன்மீக அற்புதங்கள் நிறைந்த தியான முறைகளும் ஜோதிட நுட்பங்களும் இணைந்த பயிற்சி.
யோகினி சக்கர மண்டலம் மூலம் உடனடியாகப் பலன் கூறும் சூட்சுமங்கள்.

பயிற்சி பற்றிய தகவல்கள் மற்றும் முன்பதிவுக்கு
99442 33355 - 78714 10101 - 81223 27551

# காலக்கண்ணாடி

## அக்டோபர் 2026

### விசேஷ நாட்கள்

11 - நவராத்திரி ஆரம்பம்
19- சரஸ்வதி பூஜை
20- விஜய தசமி

பௌர்ணமி 26
அமாவாசை 10
வளர்பிறை அஷ்டமி 03
தேய்பிறை அஷ்டமி 18

### மழை வரும் நாட்கள்

அளவான மழை 1, 5, 14
இடியுடன் கூடிய மழை 19, 24

### பங்குச் சந்தை

1-10 சிறிய ஏற்றம் | 11-16 இறக்கம்

16-23 அதிக இறக்கம்| 23-30 ஏற்றம்

### ஏற்றம்

சிமெண்ட், அட்டோமொபைல், மருத்துவம், கெமிக்கல், பெட்ரோலியம்

### இறக்கம்

தங்கம், போக்குவரத்து, ஆயுதம்

### குழு மரணம், இயற்கை சீற்றம் மற்றும் தீவிரவாத நிகழ்வுகள்

4, 6, 7, 9, 21, 22, 25


WhatsApp

ஆளும் கிரகம் மின்னூல் பற்றிய உங்கள் கருத்துக்களை 99 44 2 333 55 என்ற வாட்ஸ்சப் எண்ணுக்கு அனுப்புங்கள்.

## கேள்வி கேளுங்கள்

உங்களுக்கு எழும் ஜோதிடம் ஆன்மீகம் சார்ந்த கேள்விகளை ஸ்வாமி ஓம்கார் அவர்களிடம் கேட்க கீழ்கண்ட சுட்டியை அழுத்திப் பதிவு செய்யவும்.

https://forms.gle/e3vy1B2yER8YcVzD9




அடுத்த இதழில்

**யோகினி ஜோதிடம் தொடர்ச்சி**

சாம்பு மாமா சம்பவம் லோடிங்..!